මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/01/01/02-2021
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2021.12.06

தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல.: 02/2021

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள் அனைவருக்கும்

**காலாண்டு அடிப்படையில் ஆணைப்பத்திரம் விநியோகித்தல் மற்றும் பொறுப்பு முகாமைத்துவம்**

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது காலாண்டு அடிப்படையில் ஆணைப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென நிதி அமைச்சரினால் அவரது வரவு செலவுத்திட்ட உரையின் மூலம் முன்மொழியப்பட்டதனால், அனைத்து அரசாங்க நிறுவனங்களும் தமது செலவினத்தினை காலாண்டு அடிப்படையில் திட்டமிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென BD/CBP/01/01/02-2021 ஆம் இலக்க 2021.11.24 ஆந் திகதிய கடிதம் மூலம் ஏற்கனவே உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிதி முகாமைத்துவத்தின் போது நிதி ஒழுங்குகளைப் பேணுவதற்கான அடிப்படைத் தேவையாக செலவினக் கட்டுப்பாடு அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தகைய செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொறுப்புக்களை முகாமை செய்ய வேண்டும் என்பதுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மட்டுமே நிதி செலவிடப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறில்லாமல் பெருமளவு செலவினம் திரட்சியாக செலவிடப்படும்போது அதன் மூலம் ஏற்படும் பாதிப்பினைக் கவனத்திற் கொண்டு மிகவும் திட்டமிட்ட அடிப்படையிலான பொறுப்புக் கட்டுப்பாடு மூலம் முறையான மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் திரவத்தன்மை நெருக்கடிகள் ஏற்படாத வகையில் கொடுப்பனவினைச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, காலாண்டு அடிப்படையில் ஆணைப்பத்திரம் வழங்குதல் இடம்பெறும்.

அதன்படி, காலாண்டுக்கு ஒருமுறை வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து உங்களுக்குத் தெரியப்படுத்துவதே இந்த சுற்றறிக்கையின் நோக்கமாகும்.

**01. காலாண்டு ஆணைப்பத்திரத்தின் கீழ் செலவினை மேற்கொள்வதற்கான செலவினத் திட்டமிடல்**

வருடாந்த மதிப்பீட்டின் மூலம் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போது மாத்திரம் குறித்த செலவினத் தலைப்புகள் தொடர்பில் நிதி விடுவிக்கப்படாததுடன் விளைவுகளை அடிப்படையாகக் கொண்ட பொறுப்புகளுக்காக மாத்திரம் கட்டு நிதியினை விடுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு செலவினத் தலைப்பின் கீழும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்காக வருடத்தின் முதற் காலாண்டு முதல் கொடுப்பனவினை ஆரம்பிப்பதற்கு முடியுமான வகையிலும் குறித்த வருடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளினை விஞ்சாத வகையில் காலாண்டு அடிப்படை வரவு செலவுத்திட்ட வரையறைக்குள் தமது செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பெருகைத் திட்டங்களைத் (02/2020 அரச நிதி சுற்றுநிருபத்திற்கேற்ப) தயாரிக்கப்படுதல் வேண்டும்.

முன்னைய வருடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட செலுத்தப்படாத சிட்டைகள் காணப்படின் முதலில் அவற்றினைச் செலுத்தித் தீர்ப்பதற்கான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

பின்னர் தற்பொழுது அமுலிலுள்ள ஒப்பந்தங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கொடுப்பனவுகளை மதிப்பீடு செய்து அதற்கான நிதி ஏற்பாட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும். தற்பொழுது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒதுக்கீட்டு வரையறைக்குள் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் மேலதிக வேலைகளுக்காக ஈடுபடுத்துதல் அல்லது அதன் நோக்கம் மாற்றப்படாத வகையில் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் மேலும் ஒதுக்கீடுகள் மீதியாக இருப்பின், குறித்த தொகை வரை மாத்திரம் புதிதாக பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு அனுமதிக்கப்படும் என்பதுடன், மீதியான ஏற்பாடுகளின் மூலம் பொறுப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளல் அல்லது பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னர் அது தொடர்பில் நிதிக் கிடைப்பனவு உள்ளது என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

சம்பளங்கள், ஒப்பந்தச் சேவைகள், பயன்பாட்டுச் சேவைகள், தொடர்பாடல் போன்ற மீண்டெழும் செலவினங்களுக்கான செலவின அலகு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்புக்கு ஏற்ப மாதாந்த அடிப்படையில் கணக்கீடு செய்து காலாண்டு அடிப்படை ஒதுக்கீடுகளை திட்டமிடுதல் வேண்டும்.

மாதாந்த முன்னேற்றத்தினைக் காட்டாத வேறு வழங்கல்கள், அபிவிருத்தி உதவிகள், நிதி முதலீட்டு பெறுகைத் திட்டத்தின் அடிப்படையில் குறித்த நிகழ்ச்சித்திட்டங்களின் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு காலாண்டு அடிப்படையில் ஒதுக்கீட்டினைத் திட்டமிடுதல் வேண்டும்.

குறிப்பிட்ட செலவின அலகுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டு அளவுக்கேற்பவும் அபிவிருத்தி கருத்திட்டங்களை எவ்வித தடைகளுமின்றி செயற்படுத்துவதற்கு முடியுமான வகையில் நிதியினை விடுவிப்பதற்கு வருடாந்த நிதித் தேவைப்பாட்டினை காலாண்டு அடிப்படையில் திட்டமிட்டு குறித்த காலாண்டு ஆரம்பமாவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

வேலைத்திட்டங்கள் அனைத்தும் பௌதீக முன்னேற்றம் மற்றும் நிதி முன்னேற்றம் இரண்டும் பொருந்தும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். குறித்த காலப்பகுதிக்குள் மேற்கொள்ள முடியாத வேலைத்திட்டங்கள் தொடர்பான நிதி காலாண்டு அடிப்படையின் கீழ் உள்ளீடு செய்யமுடியாது.

நிவாரணம் மற்றும் நலன்புரி செலவினங்கள் ஒவ்வொரு மாதமும் சமமான எண்ணிக்கையுடைய பயன்பெறுநர்களுக்கு செலுத்துதல் போன்ற பாரம்பரிய முறைமையினை இங்கு கவனத்திற் கொள்ளாதிருத்தல் வேண்டும். காலாண்டு அடிப்படையில் தேவையினை மதிப்பீடு செய்து உண்மையாகவே மாதத்திற்கு செலுத்த வேண்டிய பயனாளிகளைத் தீர்மானித்து நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

பெறுகைச் செயன் முறையினை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்து கொண்டு குறித்த பெறுகைக்குத் தேவையான நிதி ஏற்பாட்டு அளவினை அண்ணளவாக ஒதுக்கீடு செய்து வைத்தல் வேண்டும். (Soft commitment)

பின்னர், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னர் தற்பொழுது அண்ணளவாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டின் அளவினை பரீட்சித்து, தேவையான நிதியினை உரிய கொடுப்பனவு செலுத்தவேண்டி ஏற்படும் காலாண்டுக்காக ஒதுக்கீடு செய்தல் வேண்டும். (Hard commitment) இங்கு திறைசேரியினால் அவ்வந்த காலாண்டுக்காக பொறுப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள வரையறைக்குள் மற்றும் விடுவிக்கும் நிதி அளவு தொடர்பாகவும் கவனம் செலுத்தி குறித்த வரையறையினை விஞ்சாத வகையில் பொறுப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உள்நாட்டு நிதியினைப் பொறுத்தவரை ஒருதடவைக் கொடுப்பனவு ரூபா 500 மில்லியனை விஞ்சிய பெறுகைகளின் போது உரிய கொடுப்பனவினை மேற்கொள்ள வேண்டிய காலாண்டின் அடிப்படையில் நிதியினைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்பதனை திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தில் உறுதிப்படுத்தியதன் பின்னர் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

2022 வருடத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுடன் தொடர்பான ஒதுக்கீடுகளை அவ்வந்த அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு நேரடியாக ஒதுக்கீடு செய்வதற்கு திறைசேரியினால் தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, உரிய வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை விரைவாக செயற்படுத்துவதற்கு குறித்த அமைச்சுக்களினால் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

குறித்த முன்மொழிவுகளை மிகவும் வினைத்திறன் மிக்க வகையில் செயற்படுத்துவதற்கு அரசாங்க நிறுவனங்களுக்கிடையில் சிறந்த ஒருங்கிணைப்பினைப் பேணுவதுடன் குறித்த காலப்பகுதிக்குள் நிறைவு செய்வதற்கு முடியுமான வகையில் திட்டமிடுவதற்கு விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் மூலம் முன்மொழியப்பட்ட கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு காலாண்டு அடிப்படையில் திட்டமிடுதல் திறைசேரி செயலாளரின் இல. MF/NP/Gen/2020/01 மற்றும் 2021.11.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அதில், குறித்த வருடத்திற்குள் நிறைவு செய்வதற்கு முடியுமான அபிவிருத்தி செயற்பாடுகள் மாத்திரம் வகுதியாக்கப்பட்டு பௌதீக முன்னேற்றத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் காலாண்டினை அடிப்படையாகக் கொண்டு சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு காலாண்டுக்குள்ளும் செலுத்தப்பட வேண்டிய முற்பணம் (உதாரணமாக, விசேட முற்பணம் – முதற்காலாண்டு, பண்டிகை முற்பணம் – இரண்டாவது காலாண்டு) தொடர்பாக கவனத்தினைத் செலுத்தி அனுமதிக்கப்பட்ட வரையறைக்குள் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளை காலாண்டு அடிப்படையில் திட்டமிடுதல் வேண்டும்.

**02. காலாண்டு அடிப்படை வரையறைகளை செயற்படுத்தல்**

நிதி அமைச்சரினால் காலாண்டு அடிப்படையில் ஆணைப்பத்திரம் வழங்கப்பட்டிருப்பது ஒவ்வொரு செலவினத் தலைப்புக்காக அங்கீரிக்கப்பட்ட காலாண்டு அடிப்படை வரையறைக்கேற்ப என்ற வகையில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலாண்டு செலவின வரையறையினை விஞ்சுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் நிதி ஏற்பாடு மீதியாயின் அவ்வாறு எஞ்சிய நிதி ஏற்பாட்டினை அடுத்த காலாண்டிற்காக முன் கொண்டு செல்வதற்கு அனுமதி

வழங்கப்படமாட்டாது என்பதுடன் அவற்றினை கட்டுப்பாட்டுக்கு அப்பால் விசேட காரணங்களின் அடிப்படையில் மிதியேற்படுமாயின் அந்த மீதியினை முன்கொண்டு செல்வதற்கு திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

காலாண்டு அடிப்படையில் செலவினத்திற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருப்பினும் அடுத்த காலாண்டின்போது கொடுப்பனவு செலுத்த வேண்டிய அர்ப்பணிப்புகள் ஏற்படுவதற்கு முன்னர் குறித்த காலாண்டிற்கு நிச்சியமான நிதி ஏற்பாடு மீதமாகக் காணப்படும் என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அதேபோன்று ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) பிரிவின் கீழ் மேலும் புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது கருத்திட்டங்களுக்காக எதிர்காலத்தில் நிதி ஏற்பாடுகள் நிறுத்தப்பட்டிருப்பின் எதிர்காலத்தில் மேலதிக நிதியினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கதுடன் செலவினத்திற்கான அர்ப்பணிப்பினை ஏற்படுத்தக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

பல வருடங்களுக்கு செயற்படுத்தப்படுகின்ற பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது வருடாந்த அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற வரையறையினை கருத்திற்கொண்டு அர்ப்பணிப்புகளுக்கு முன்வருதல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் வருட மொன்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டு வரையறையினை விஞ்சாத வகையில் அர்ப்பணிப்புகளுக்கு உட்படுவது பொறுப்பாகும்.

## 03. கணக்கீடு மற்றும் அறிக்கையிடல்

ஆணைப்பத்திரம் விநியோகிப்பது காலாண்டு அடிப்படையில் இடம்பெறுகின்ற போதிலும் நிதி கிடைக்கின்ற அடிப்படையில் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் கணக்கீட்டினை மேற்கொண்டு திறைசேரிக்கு அறிக்கையிடுவது வழமைபோன்று இடம் பெறுதல் வேண்டும்.

## 04. பொதுவான வழிகாட்டல்கள்

ஏதேனும் ஒரு வருடத்திற்கான நிதி ஏற்பாட்டினை தொடர்ந்து ஒதுக்கீடு செய்யப்படும் என்ற எடுகோளின் அடிப்படையில் அடுத்த வருடத்திற்காக எவ்வகையிலும் பொறுப்புகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. செலவின மதிப்பீடு தொடர்பில் வருடாந்த அடிப்படையில் பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்படுமாயின் உரிய அங்கீகாரத்திற்கேற்ப அரசாங்கத்தினால் இணங்கியுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாத்திரம் நடுத்தரகால வரவு செலவுத்திட்ட சட்டகத்தின் கீழ் நிதி ஏற்பாடு வழங்கப்படும்.

அரசாங்க நிறுவனங்களில் ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அதற்காக தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குள் குறித்த சிட்டைகளை கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அக்கொடுப்பனவினை காலம் தாழ்த்துதல் அல்லது குறித்த ஏற்பாட்டினை வேறு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதனை தவிர்த்தல் வேண்டும்.

பொறுப்பு முகாமைத்துவத்தினை ஒழுங்குபடுத்துவதற்காக ஒவ்வொரு அமைச்சும் அவற்றின் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்களினது பொறுப்புகள் தொடர்பாக மிகவும் நெருக்கமான கண்காணிப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

திறைசேரியானது நிதியினை விடுவிப்பது அனுமதிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட வரையறைக்குள் என்பதனால் குறித்த வரையறையினை விஞ்சிய வகையில் பொறுப்பினை ஏற்படுத்திக்கொள்வதன் காரணமாக செலுத்தவேண்டிய சிட்டைகளை கொடுத்துத் தீர்க்க முடியாதபோது திறைசேரியின் நிதி கிடைக்கப்பெறாமை என்பதனை நியாயமான காரணமாக தெரிவிக்காதிருப்பதற்கு பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் பிரதான கணக்காளர்கள் பொறுப்புடையவர்களாவர்.

எவ்வாறாயினும், பொறுப்பு முகாமைத்துவ செயற்பாட்டினை மேலும் வலுப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் வருமான உட்பாய்ச்சலில் ஏற்படும் பருவகால

மாற்றங்கள் (Seasonal Fluctuations of Revenue Flows) அரசாங்கத்தின் கடன் பெறுகைத் திட்டம் (Borrowing Plan) மற்றும் செலவின முறைமைகள் தொடர்பாக திறைசேரியினால் நிரந்தரமாக மதிப்பீடு செய்யப்படவேண்டியுள்ளது. இந்த வகையில், 2022 வருடம் முதல் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு வரையறைக்குள் அவ்வந்த செலவினத் தலைப்புக்காக அடுத்த காலாண்டு தொடர்பில் விடுவிக்கின்ற நிதியின் அளவு குறித்து உரிய நிறுவனத்திற்கு அறிவிப்பதற்கு திறைசேரியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**05.** இந்த சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு விசேட கவனம் செலுத்தி தமது நிறுவனங்களின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் செலவினத்தினை திட்டமிடுவதற்கும் பொறுப்பினை முகாமை செய்வதற்குமான பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்படுவதுடன் அதன் மூலம் அரசாங்கத்தின் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கு உங்களுக்கு தேவை ஏற்படின் இந்த வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கி5றேன்.

**06.** காலாண்டு அடிப்படை வரவு செலவுத்திட்டம் தொடர்பில் 5 தேவையான தெளிவினைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினையும் (தொ.பே.இல. 011-2484681), நிதியேற்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றுக் கொள்வதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினையும், (தொ.பே.இ. 011-2484901), கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் தொடர்பான தெளிவினைப் பெறுவதற்கு அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினையும் (தொ. பே.இ. 011-2484826) தொடர்பு கொள்ளுதல் 5வேண்டும்.

ஒப்பம் /
எஸ். ஆர். ஆட்டிகல
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள் :

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்